வாக்குமூலம்

குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் CC. No. 299/2022

வழக்கு சாட்சி – PW 5

பெயர் :: திரு. ஜாகீர் உசேன் தொழில் ::

த/பெ பெயர் :: வயது ::

கிராமம் ::

தாலுகா ::

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 22.08.2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை** (நேரம் : காலை 11.25 மணி)

நான் தற்போது சித்தார்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். சூப் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். சாட்சிகள் உவைசுல் கரீம், முகமது ரைசுதீன், முஸ்தபா கமால், அசாருதீன் ஆகியோர்களை தெரியும். வாகன விபத்தில் இறந்துபோன காஜாமுகைதீன் என்பவரை தெரியும், அவர் எங்கள் ஊர் சித்தார்கோட்டையை சேர்ந்தவர். சுமார் 4 ½ வருடங்களுக்கு முன்பு மதியம் 01.00 மணியளவில் சித்தார்கோட்டை, சமத்துவப்புரத்தில் உள்ள எனது கடையை திறந்து வைத்து கொண்டிருந்தேன். அப்போது காஜாமுகைதீன் இருசக்கர வாகனத்தில் இராமநாதபுரத்திலிருந்து சித்தார்கோட்டைக்கு வந்து கொண்டிருந்தார். அப்போது சித்தார்கோட்டையிலிருந்து இராமநாதபுரம் நோக்கி இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபர் காஜாமுகைதீன் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டார். சம்பவத்தின்போது இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரை நான் பார்த்தேன். நீதிமன்றத்தில் காட்டப்படும் ஆஜர் எதிரி தான் அந்த வாகனத்தை ஓட்டி வந்தார். அவர் அப்போது வாகனத்தை எவ்வாறு ஓட்டி வந்தார் என்று நான் பார்க்கவில்லை. சம்பவத்தின்போது ரைசுதீன் மற்றும்

J JEYA SUTHAHAR Digitally signed by J JEYA SUTHAHAR Date: 2025.08.22 15:52:40 +0530

அக்கம் பக்கம் இருந்தவர்கள் அங்கு வந்தார்கள். அவர்களுக்கு சம்பவம் தெரியும். விபத்தில் காஜாமுகைதீனுக்கும், ஆஜர் எதிரிக்கும் காயம் ஏற்பட்டது. சித்தார்கோட்டை, ஜமாத்து ஆம்புலன்ஸ்க்கு தகவல் கொடுத்து ஆம்புலன்ஸ் வந்ததும் அதில் காயம்பட்ட இருவரையும் ஏற்றி இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். விபத்தில் காயம்பட்ட காஜாமுகைதீன் இறந்துவிட்டதாக பின்னர் கேள்விப்பட்டேன். விபத்து சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

எனது கடைக்கு அருகில் கதிர்வேலன் பெட்டி கடை, அன்பு ரெடிமேட் கடை, SKG சலூன் கடை, ரகுமா பீவி ஆஸ்பெஸ்டாஸ் கடை ஆகியவை உள்ளது. அந்த கடையில் இருந்தவர்கள் சம்பவத்தை நேரில் பார்த்ததாக நான் போலீஸ் விசாரணையில் நான் சொல்லவில்லை. நான் எனது கடையை திறப்பதற்கே நேரம் ஆகிவிட்டதால் கடை திறப்பதில் மும்முரமாக இருந்தேன். அப்போது விபத்து நடந்த சத்தம் கேட்டு நான் போனேன். விபத்தில் இறந்துபோன காஜாமுகைதீன் எத்தனை மணிக்கு புறப்பட்டு இராமநாதபுரம் சென்றார் என்றோ அங்கிருந்து எத்தனை மணிக்கு திரும்பி வந்தார் என்றோ எனக்கு தெரியாது. அவர் கடை எதுவும் நடத்தவில்லை. இராமநாதபுரத்திலிருந்து பால் பாக்கெட் மற்றும் காய்கறிகள் வாங்கி கொண்டு இருசக்கர வாகனத்தில் வந்தார். அவர் இருசக்கர வாகனத்தில் வரும்போது மாடு குறுக்கே வந்ததால் அவர் நிலை தடுமாறி விழுந்து விபத்து ஏற்பட்டதாக நான் கேள்விப்பட்டேனா என்றால் அவ்வாறு கேள்விப்படவில்லை. இராமநாதபுரத்திலிருந்து சித்தார்கோட்டைக்கு செல்லவேண்டும் என்றால் சாலையின் வடக்குப்புறமாக தான் செல்வார்கள் என்றால் சரிதான். அந்த சாலையின் தெற்குப்புறம் மடையின் அருகில் தான் விபத்து நடந்தது. விபத்து நடந்தபோது அந்த இடத்தில் சுமார் 20 பேர் இருந்தார்கள். யார் யார் இருந்தார்கள் என்று நான் போலீஸ் விசாரணையில்

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2025.08.22 15:52:48 +0530

சொல்லவில்லை. விபத்து நடந்தவுடன் ஆம்புலன்சுக்கு போன் மூலம் தகவல் சொல்ல சொல்லிவிட்டு நான் என் கடைக்கு போய்விட்டேன். நான் அந்த ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு போகவில்லை. பின்னர் விபத்தில் காயம்பட்ட காஜாமுகைதீன் இறந்துவிட்டார் என்று கேள்விப்பட்ட பிறகு காயம்பட்ட மற்றொரு நபர் யார் மற்றும் எந்த ஊர் என்பது பற்றி போலீசார் விசாரணை செய்து சொல்லிய பிறகு தெரிந்து கொண்டேன். விபத்திற்கு முன்பு நான் அவரை பார்த்ததில்லை. அவர் யார் மற்றும் எந்த ஊர் என்று எனக்கு விபத்திற்கு முன்பு தெரியாது. விபத்திற்கு பிறகு இன்று தான் எதிரியை நீதிமன்றத்தில் பார்க்கிறேன். இடையில் நான் அவரை பார்க்கவில்லை. அ.சா.4–ஐ விசாரணைக்கு காவல் நிலையத்திற்கு அழைத்தபோது நான் அவருடன் காவல் நிலையம் செல்லவில்லை. அதன்பிறகு இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. இந்த வழக்கில் என்னை சாட்சியாக சேர்த்துள்ளதாக கூறி போலீசார் என்னிடம் விபத்து நடந்த அன்று கையெழுத்து வாங்கினார்கள். அப்போது நான் எழுதிய பேப்பரில் எத்தனை கையெழுத்து போட்டேன் என்றும், எழுதாத பேப்பரில் எத்தனை கையெழுத்து போட்டேன் என்றும் தெரியவில்லை. உவைசுல் கரீம், முஸ்தபா கமால், அசாருதீன் மற்றும் வழக்கில் இறந்துபோன நபர் ஆகிய நாங்கள் அனைவரும் ஒரே ஜமாத்தை சேர்ந்தவர்கள் மற்றும் உறவினர்கள் என்றால் சரிதான். போலீசார் கையெழுத்து கேட்டதால் நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன். விபத்தில் இறந்துபோன நபரின் மகன் விபத்து நஷ்ட ஈடு கோரி மனு தாக்கல் செய்து ரூ.15,00,000/– நஷ்ட ஈடு பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அதுபற்றி இறந்துபோன நபரின் மகனிடம் நான் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. தற்போது சொன்ன விபரங்களை தான் போலீசார் விசாரித்தபோது சொன்னேன். சம்பவம் நடந்தபோது நான் கடை திறப்பதில் தான் மும்முரமாக இருந்தேன் என்றும், விபத்து சம்பந்தமாக எந்த விபரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றும், யாருடைய கவனக்குறைவினால் விபத்து ஏற்பட்டது என்றும் எனக்கு தெரியாது என்றும்,

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2025.08.22 15:52:55 +0530

விபத்தில் இறந்துபோன நபர் எங்கள் ஜமாத்தை சேர்ந்தவர் என்பதால் அவரது குடும்பத்திற்கு இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக போலீசார் சொல்லிக்கொடுத்து அதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2025.08.22 15:53:06 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.